**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14 ஆம் நாள் செவ்வாய்கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திருமதி. சே.சங்கீதா, உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 508/2018** பி.வா.சா. 1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பாண்டுரங்கன் | **வயது** | : | 85 |
| **த.பெ** | : | மொட்டைய கவுண்டர் | **தாலுக்கா** | : | |
| **கிராமம்** | : | மண்டகொளத்தூர் | **தொழில்** | : | விவசாயம் |

**14.10.2025 – பி.வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1) நான் கிருஷ்ணமூர்த்தி என்பவரிமிருந்து தான் தாவா சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்திக்கு உரிமை இல்லாத சொத்தை எனக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. **பி.சா.ஆ 2** மற்றும் **பி.சா.ஆ-3** கிரையபத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தை அல்லாமல் **பி.சா.ஆ-1** மூலம் நான் கிருஷ்ணமூர்த்தி என்பவரிடமிருந்து நான் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சர்வே நெம்பர்களின் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவாசொத்தை வாங்கியபோது வில்லங்கம் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. தாவா வழக்கை தாக்கல் செய்தபிறகு தான் தாவா வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை மறைத்து **பி.சா.ஆ-5** பட்டா பெறப்பட்டது என்றால் சரியல்ல. **பி.சா.ஆ-4** புத்தகம் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

2) **பி.சா.ஆ-6** ஆவணம் கிருஷ்ணமூர்த்தி அவர்களின் பெயரில்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். **பி.சா.ஆ-7** ஆவணம் தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. **பி.சா.ஆ-8** ஆவணமும் அசல் உரிமையாளர் ஏழுமலை பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். **பி.சா.ஆ-10** நான் பெற்ற என் பெயரில் உள்ள consumer ledger ஆனது வழக்கு நிலுவையில் இருந்ததால் அதை மீண்டும் ரத்து செய்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற கிருஷ்ணமூர்த்தி அவர் தனக்கு உரிமையில்லாத சொத்துக்களை சேர்த்து எனக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும், அதன் அடிப்படையில் உரிமை இல்லாத சொத்திற்கு உரிமைகோரி தவறாக எதிர்வழக்கு நடத்துகிறீர்கள் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்த 2 வழக்குகளும் தாவாப்படி செலவுத்தொகையுடன் தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2025.10.15 11:14:00 +0530

District Munsif,
Polur.